**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**

**TIRUVANNAMALAI.**

**S.C. NO. 131/2021**

**PW14**

| | | |
|---|---|---|
| Name | : | ஆர். மூத்தையாசெட்டி |
| Father's/Husband's Name | : | ராஜகோபால் |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 20.12.2024.

**முதல் விசாரணை**

நான் காவல் துறையில் உதவி ஆய்வாளராக திருவண்ணாமலை மாவட்ட DCRB ஆக பணிபுரிந்து பணிநிறைவு பெற்று திருவண்ணாமைலையில் வசிக்கிறேன். கடந்த 08.03.2017 ம் தேதி மங்களம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது ரவி வயது.39 த.பெ. நாராயணன் என்பவர் நிலையம் வந்து கொடுத்த புகாரினை பெற்று நிலைய குற்ற எண். 58/2017 பிரிவுகள் 174 சி.ஆர். பி.சி ( சந்தேக மரணம்) படி 22.30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 9. புகார்மனுவையும் முதல் தகவல் அறிக்கையையும் இணைத்து திருவண்ணாமலை நீதித்துறை நடுவர் 2 அனுப்பி வைத்தேன். மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். மேல் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை

விசாரித்தார். தற்போது சாட்சி முதல் அறிக்கையையும் புகாரையும் திருவண்ணாமலை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பியதாக கூறுகிறார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை -**

என்னை விசாரித்த ஆய்வாளரின் பெயர் குமார். அவர் என்னை என்று விசாரித்தார் என்று கேட்டால் சாட்சி போலிஸ் வழக்கு கோப்புகளை முற்றிலும் ஆய்வு செய்து விட்டு பின்னர் ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். 07.03.2017 அன்று இரவு 08.00 மணிக்கு ரவி என்னிடம் புகார் ஏதேனும் கொடுத்தாரா என்று கேட்டால் அந்த நாளிலும்அந்த நேரத்திலும் எந்த புகாரும் கொடுக்கவில்லை. என்னிடம் கொடுத்த புகாரில் ரவி ஒரே கையொப்பம் மட்டுமே செய்து இருந்தார். அந்த புகார் காவல் நிலையத்தில் வைத்து எழுதப்பட்டதா என்றால் இல்லை. எழுதிய புகாரை காவல் நிலையத்திற்கு கொண்டு வந்தார். ரவி காவல் நிலையத்திற்கு வரும்போது அவர் துக்கம், ஆத்திரம், பதட்டத்துடன் காணப்பட்டாரா என்றால் தம்பியை வெட்டிப்போட்டதால் பதட்டத்துடன் இருந்தார். நான் புகாரை வாங்கிய போது ரவியின் கையொப்பம் இருந்தது. ரமேஷ் இறந்து விட்டார் என்பது புகார் கொடுப்பதற்கு அரை மணி நேரத்திற்கு முன் தெரியும். ரமேஷ் இறந்த தகவலை புகார்தாரர்தான் என்னிடம் தெரிவித்தார். ரமேஷ் இறந்த தகவலை இரவு 10.00 மணி அளவில் சொன்னார். இறந்த ரமேஷ் உடலை நான் பார்த்தேனா என்றால் ஞாபகம் இல்லை. நிலைய ஆய்வாளருக்கு வழக்கு கோப்பையை கொடுக்கும்போது ரமேஷ் இறப்பு பற்றி அவருக்கு சொன்னேன். அச்சு முதல் தகவல் அறிக்கையில் coloumn 3ல் குற்றம் நிகழ்ந்த நாள் மற்றும் நேரம் 07.03.2017 இரவு 08.00 மணி முதல் 08.03.2017 மதியம் 02.00 வரை என்று உள்ளது என்றால் சரிதான். அது செவ்வாய் மற்றும் புதன் கிழமை என்று பொருள் என்றால் சரிதான்.

புதன் கிழமை என்று அதில் எழுதவில்லை என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். coloumn 5ல் தெரு எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். coloumn 7ல் ஐயப்பாட்டிற்குரிய நபர்கள் என்ற இடத்தில் எதிரிகளின் பெயர்கள் இல்லை என்றால் சரிதான். புகாரில் எதிரிகள் 1 மற்றும் 2 ஆகியோர் பெயர் உள்ளது என்றால் சரிதான். coloumn 11 பூர்த்தி செய்யப்படவில்லை என்றால் சரிதான். coloumn 15ல் முதல் தகவல் அறிக்கையில் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நேரம் என்ற இடம் காலியாக உள்ளது என்றால் சரிதான். நாள் குறிப்பிடப்பட்டு உள்ளது. அச்சுப்படிவ முதல் தகவல்அறிக்கையில் ரவி லேபர் என்று எப்படி குறிப்பிட்டேன்

என்றால் அவர் சொல்வதை வைத்து குறிப்பிட்டேன். குற்றம் நிகழ்ந்தததாக சொல்லப்படும் நேரத்திற்கும் புகார் கொடுத்ததற்கும் இடையே 8 1/2 மணி நேரம் இடைவெளி உள்ளது என்றால் சரிதான். புகார்தாரர் என்னிடம் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும்தெரியாது என்றும் ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. இறந்தவர் குடும்பத்தை சேர்ந்தவர்கள் சாலை மறியலில் ஈடுபட்டதால் ஆய்வாளர் இப்படி ஒரு வழக்கை பதிவு செய்தார் என்றால் சரியல்ல. ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

Sd/- B.C. Gopinath
Additional District Judge,
Tiruvannamalai.